THIRU K. S. KOTHANDARAMIAH : About eight sheep breeding centres are closed in Hosur taluk. Government have constructed a number of buildings. Since these centres are closed, the buildings are in a ruinous condition. Hosur has got a congenial climate and facilities for sheep breeding. Under the circumstances will the Hon. Minister think of reviving the closed sheep centres?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி ஒன்றும் இப்போது யோசனை இல்லை.

முட்டைப்பொடி தயாரிப்பு

*298 வினு—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முட்டைப் பொடி (Egg Powder) செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் தமிழக அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

கைத்தறி துணிக்கு விற்பனைக்கழிவு வீதத்தில் உயர்வு

*299 வினு— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ நாட்களில் கதர்த் துணிக்கு தரப்படுகின்ற அளவுக்குக் கைத்தறி துணிக்கும் விற்பனை கழிவு (ரிபேட்) உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கதரைவிட கைத்தறியில் அதிகமான தொழிலாளர்கள் ஈடுபடுகிற காரணத்தினுல், அவர்கள் மீது கருணை காட்டி இவர்களுக்கும் அதிகமான ரிபேட் வழங்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கதருக்கென்று ஒரு வாரியம் தனியாக இருக்கிறது. மத்திய அரசாங்கம் அதற்கென்று தனித் திட்டம் வகுத்திருக்கிருர்கள். கைத்தறிக்கு அது அனுமதிக்கப்படுவதில்லை.

திரு. சி. வீரமணி : தீபாவளி சமயத்தில், பொங்கல் சமயத்தில் கதர் கைத்தறிகளுக்கு ரிபேட் கொடுப்பதுபோல--கையினுல் செய்யப்படக்கூடிய மிதியடிகளுக்கும், அவை இயந்திரத்தினுல் செய்